இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை 2007
ஒப்பந்தச் சட்டமும் முகவராண்மையும் - LWU 2311
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 06.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

பகுதி I இலிருந்து ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எளையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

## பகுதி I - முகவராண்மைச்சட்டம்

இப்பகுதியில் இருந்து ஒரு வினாவுக்கு மட்டும் விடைதருக.

1. 'முதல்வர் மற்றும் முகவர் ஆகியோருக்கிடையிலான உறவு முறை அவர்களுக்கிடையிலான உரிமைகள் மற்றும் கடமைகளை உருவாக்குகின்றது. எவ்வாறாயினும், ஒரு திறத்தவருடைய உரிமைகள் நிச்சயமாக மறுதிறத்தவருடைய கடமைகளுடன் தொடர்புபடுகிறது என தோன்றுகிறது'.

   கருத்துரைக்க.

2. சந்தையில் இருந்து பச்சை நிற அப்பிள்களை கொள்முதல் செய்வதற்காக சித்தாரா தன்னுடைய முகவராக அருணவை 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி நியமித்தாள்.

   பின்வரும் சூழ்நிலைகளில் மூன்றாம் திறத்தவர் உட்பட பல்வேறுபட்ட திறத்தவர்களின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் கருத்திற்கொள்க.

   (அ) பச்சை நிற அப்பிள்களுக்கு பதிலாக 30 கிலோகிராம் பச்சை நிற திராட்சைப்பழங்களை ஜாயாவிடம் இருந்து அருண் கொள்வனவு செய்தான்.

   (ஆ) அருண 2007ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி 30 கிலோகிராம் பச்சை நிற அப்பிள்களை கொள்வனவு செய்தான்.

   (இ) அருண 30 கிலோகிராம், பச்சை நிற அப்பிள்களை கொள்வனவு செய்து சித்தாராவினால் வழங்கப்பட்ட தரகுக்கு மேலதிமாக ரூ. 1250/= வை வருமானம்மாக பெற்றான்.

   (ஈ) சந்தையில் இருந்து வாங்கப்பட்டதாக கூறி தன்னுடைய சொந்த அப்பிள்களில் இருந்து 30 கிலோகிராமை அருண, சித்தாராவுக்கு விற்றான்.

3. மூன்றாம் திறத்தவர் உட்பட திறத்தவர்களுடைய உரிமைகளும் கடமைகளும் முதல்வர் ஒருவர் வெளிப்படுத்தப்பட்டுள்ளாரா அல்லவா என்ற விடயத்திலேயே பிரதானமாக தங்கியுள்ளது.

தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் ஏதெனுமிருப்பின் அவற்றுடன் தொடர்புறுத்தி இக்கூற்றின் வலிதான தன்மையை பரீட்சிக்க.

## பகுதி II – ஒப்பந்தச் சட்டம்

இப்பகுதியிலிருந்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

4. பின்வருவனவற்றின் மீது சுருக்கமாக கருத்துரைக்க. உமது விடையை ஆதாரப்படுத்த தீர்க்கப்பட்ட வழக்குகள் ஏனைய சான்றுகளை குறிப்பிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறீர்.

(அ) " 'நிபந்தனைகள்' அல்லது 'நியதிகள்' என வரையறை செய்ய இயலாத பல சிக்கலான பண்புகளுடைய பாரிய ஒப்பந்தம் சார் வியாபார நடவடிக்கைகள் காணப்படுகின்றன. ஒப்பந்தம் ஒன்றிலே வெளிப்படையாக குறிப்பிடப்படாத வரையில் அத்தகைய வியாபார நடவடிக்கை ஒன்றின் முறிவினுடைய சட்ட விளைவுகள், முறிவொன்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்த நிகழ்வு ஒன்றின் இயல்பில் தங்கியிருக்குமே தவிர நிபந்தனைகள் அல்லது நியதிகள் என்பன முன்னைய ஒரு வகைப்பாட்டிற்குள் இருந்து தன்னிச்சையாக எழாது..."

(ஆ) அடிப்படை முறிவு கோட்பாடு, எதிர்பார்த்த முறிவு என்பன ஒப்பந்தம் ஒன்றின் நிபந்தனை முறிவின் சட்டவிளைவுகளுடன் நிச்சயமாக தொடர்புபடுகிறது.

5. கிறிகம விவசாயிகள் அமைப்பு கிரிகம கிராமத்தினுடைய பால் உற்பத்தியை ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன் குறிப்பிட்ட கிராம விவசாயிகளுடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டது.

(அ) தமது அமைப்பு தவிர வேறு எவருக்கும் பால் விற்பனை செய்யப்படக்கூடாது என்ற அடிப்படையில் கிரிகம கிராமத்திலுள்ள தமது உறுப்பினர்களிடம் இருந்து பால் உற்பத்திகளை கொள்வனவு செய்வதாக அந்த அமைப்பு வாக்குறுதி வழங்கியது.

விவசாயிகள் உமது ஆலோசனையை நாடுகின்றனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) அவ்வமைப்பின் சேகரிக்கும் நிலைய குளிர் அறை கட்டுப்பாட்டாளரான பண்டா என்பவன் கிரிகமவில் இருந்து 25 கிலோ மீற்றர் பிரதேச எல்லைக்குள் அதே பண்புடைய வியாபாரத்தில் குளிர் அறை கட்டுப்பாட்டாளராக எப்போதும் தான் தொழில் புரிய மாட்டான் என உறுதி அளித்தான். எவ்வாறாயினும் பண்டா தனது வேலையில் இருந்து விலகி கிராமத்தை அண்மைய இடத்திலுள்ள இன்னுமொரு குளிர் பதனிடும் அறையில் சிறந்த ஊதியத்தில் தொழிலில் சேர்ந்தான்.
பண்டா உமது ஆலோசனையை நாடுகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.
இலங்கையில் உள்ள அதே போன்ற வியாபாரத்தில் குளிர் அறை கட்டுப்பாட்டாளராக தொழிற்பட மாட்டான் என உறுதி அளித்திருந்தால் உமது ஆலோசனையில் வேறுபாடு ஏற்படுமா?

6. பெப்ரவரி 1ஆம் திகதி கொழும்பில் இருந்து நிலாவெளி கடற்கரைக்கு எடுத்துச்செல்வதாக காமினியுடன் 'பன்டாசி பயணிகள் நிலையம்' உடன்பட்டது. புறா தீவைச் சுற்றி செல்வதற்கான ஒரு கப்பல் பயணத்தையும் பயணப்பொதி உள்ளடக்கி இருந்தது.

பின்வரும் சூழ்நிலைகளில் உள்ள சட்டநிலைமையை கருத்திற்கொள்க.

(அ) 2007 பெப்ரவரி 10ஆம் திகதி 'பன்டாசி பயணிகள் நிலையம்' இன்னும் சில உல்லாச பயணிகளுடன் திருகோணமலையை நோக்கி வெற்றிகரமாக தனது பயணத்தை ஆரம்பித்தது. நிலாவெளி கடற்கரை பிரதேசத்திற்கு வருகை தர பன்டாசி பயணிகள் நிலையத்திற்கு சந்தர்ப்பம் இருந்த போதிலும் இராணுவ தளபதியினால் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்பாட்டின் காரணமாக கப்பல் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் அவர்கள் கொழும்புக்கு திரும்பினர்.

(ஆ) மோசமான காலநிலை மற்றும் அரசாங்கத்தின் எண்ணெய் விலை ஏற்றம் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் காரணமாக பயணத்தை மேற்கொள்ள கூடிய நிலையில் தாங்கள் இல்லை என 2007 பெப்ரவரி 7ஆம் பன்டாசி பயணிகள் நிலையம் குறிப்பிடுகிறது.

7. (அ) "தகவல் தொழில் நுட்ப சகாப்தத்தில் 'தபால் ஏற்பு விதி' என்பதன் பிரயோகத்திற்கு இடமில்லை" .

தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி இக்கூற்றின் வலிதான தன்மை மீது விமர்சித்து கருத்துரைக்க.

(ஆ) தீர்ப்புச்சட்டம், நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பன ஒப்பந்தங்களில் இருக்கக்கூடிய விலக்களிப்பு வாசகங்களின் எல்லைகளை மட்டுப்படுத்தும் வழிமுறைகளை கருத்திற் கொள்க.

8. பிழை என்ற கோட்பாட்டின் அபிவிருத்தியுடன் பெல் எதிர் லிவர் பிரதர்ஸ் (1932) A.C 161 வழக்கின் இயல்பு மற்றும் விளைவுகளை விமர்சித்து ஆராய்க. அதிகாரப்பூர்வமான அதிகாரங்களுடன் தொடர்புறுத்தி இக் கோட்பாட்டின் தற்போதைய நிலையை கருத்திற் கொள்க.

9. பொருத்தமான இடங்களில் தீர்க்கப்பட்ட வழக்குடன் தொடர்புறுத்தி பின்வருவனவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(அ) வெற்றான ஒப்பந்தங்கள் மற்றும் வெறிதாக்கத்தகு ஒப்பந்தங்கள்.

(ஆ) மோசடியான பிறழ்கூற்று மற்றும் கவனையீனமான பிறழ்கூற்று

(இ) சிறு பராயத்தவர் மற்றும் குடிபோதையில் உள்ளோர் ஈடுபட்ட ஒப்பந்தங்கள்.

(ஈ) பரஸ்பர பிழை மற்றும் பொதுப்பிழை

10. பின்வருவனபற்றி குறிப்பு எழுதுக.

(அ) *contra preferentum* விதி
(ஆ) இழியேதுவால் வழக்கெழாது
(இ) வாழ்வார் இடைகொடை மற்றும் சாவேதுக் கொடை
(ஈ) கையளிக்கப்பட்டது மீள கையளிக்கபடலாகா.

(பதிப்புரிமைபெற்றது)